an International CBSE Finger Print School
Coimbatore

# இயல் 2.4 - கிழவனும் கடலும்

GRADE- VI

QUESTION BANK

1. கிழவனும் கடலும் என்ற துணைப்பாடத்தைக் கட்டுரையாக எழுதுக.

## முன்னுரை:

சாண்டியாகோ என்ற வயது முதிர்ந்த மீனவர் இருந்தார். அவரது தன்னம்பிக்கை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## மனோலினின் விருப்பம்:

மனோலின் என்ற சிறுவன் மீன் பிடிக்கக் கற்றுக்கொள்வதற்காக சாண்டியாகோவுடன் முதல் நாற்பது நாள்கள் கடலுக்குச் சென்றான். மனோலின் அவருக்கு உதவிகள் செய்வதோடு பேச்சுத் துணையாகவும் இருந்தான்.

## பெற்றோரின் மனமாற்றம்:

நாற்பது நாள்களும் மீன்கள் கிடைக்காததால், மனோலினின் பெற்றோர் அவனை வேறு படகிற்கு அனுப்பினர். அதன் பிறகு சாண்டியாகோ மட்டும் கடலுக்குச் சென்றார்.

## சாண்டியாகோவின் தன்னம்பிக்கை:

எண்பத்து ஐந்தாவது நாளாயிற்று. அவரைப் பார்த்து எல்லோரும் அவருக்கு மீன் கிடைக்கவே கிடைக்காது என்று கூறினர். ஆனால் சாண்டியாகோ விடாமுயற்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் மீன் பிடிக்கச் சென்றார்.

## தூண்டிலில் மீன் சிக்குதல்:

தொடர் முயற்சிக்குப் பிறகு சாண்டியாகோவின் தூண்டிலில் ஒரு பெரிய மீன் சிக்கியது. பல போராட்டங்களுக்குப் பிறகு ஈட்டியால் மீனைக் குத்திக் கொன்று மிகவும் கடினப்பட்டு மீனை இழுத்துப் படகிற்குள் போட்டார்.

## சுறாமீன்களின் தொல்லை:

சாண்டியாகோ பிடித்த மீனை உண்பதற்காக சுறாமீன்கள் அவரது படகை நோக்கி வந்தன. அவைகளோடு போராடி ஒரு வழியாக கரைக்கு வந்து சேர்ந்தார். ஆனால் இறுதியாக மீனின் தலையும் எழும்பும் தான் எஞ்சியிருந்தது. அவரைப் பார்க்க மனோலின் ஓடி வந்தான்.

## முடிவுரை:

மனோலின் அவரைப் பார்த்து 'மீன் பிடிப்பதில் நீ பெரிய வீரன் தாத்தா! உன் திறமையும் விடா முயற்சியும் வென்று விட்டது' என்று கூறி மகிழ்ந்தான்.

காகமும் மானும் இணைபிரியா நண்பர்கள். அவர்களைப் பிரித்து மானை எப்படியாவது கொன்று தின்றுவிட வேண்டும் என எண்ணி நரி, காகத்திடமிருந்து மானைப் பிரிக்க எண்ணியது.

நரியை நண்பனாக ஏற்றுக்கொண்ட மானிடம் "நண்பா, யாரையும் நம்பி விடாதே! அது நமக்கு ஆபத்து." என்று காகம் கூறியது. மேலும் "கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய் என்றது. ஆனால் மான் காகத்தின் அறிவுரையைக் கேட்கவில்லை. நரியை நம்பியது.

தந்திர நரி, மானை விவசாயி ஒருவரின் விளைச்சல் நிலத்திற்கு அழைத்துச் சென்றது. மான் அங்கு மேய்ந்துக் கொண்டிருக்கும் போது விவசாயி பார்த்து விட்டார். விவசாயி மானைத் துரத்தும் போது மான் கம்பிவேலியில் மாட்டிக்கொண்டது.

அதைக் கண்ட காகம் விவசாயி அருகில் வரும் வரை நீ இறந்ததுபோல் அசையாமல் இரு விவசாயி உன்னை வேலியிலிருந்து விடுவித்தவுடன், நான் மரத்திலிருந்து கா கா கா என்று குரல் கொடுக்கிறேன், உடனே தப்பித்து விடு என்றது காகம்.

அதன் படி மான் நடித்தது. வேடன் விடுவித்தவுடன் காகம் கரைய மான் தப்பி ஓடியது.

இக்கதையின் மூலம் “ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்” என்ற நீதியை அறியலாம்.